**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 65/2022 Date:07.07.2026.**

**(DW1)- ராஜப்பன்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு பட்டிகை சொத்தில் கட்டியுள்ள வீட்டிற்குபஞ்சாயத்து அனுமதி வாங்கி கட்டியுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அனுமதியானது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வாங்கிவிட்டேனா என்றால் வழக்கு தாக்கல செய்துவதற்கு முன்பே வாங்கிவிட்டேன். பஞ்சாயத்து சார்பில் வழங்கப்பட்ட அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் சாட்சி பதில் எதுவும் கூறாமல் அமைதியாக உள்ளார். என் மீது இரணியல் காவல் நிலையத்தில் வாதிகள் புகார் கொடுப்பதற்கு முன்பு அனுமதி பெற்றேனா என்றால் முன்பு தான் அனுமதி பெற்றேன்.

2. வீட்டிற்கு எந்த வருடம் முதலில் வரி செலுத்தினேன் என்றால் 4 வருடங்களுக்கு முன்பே வரி செலுத்திவிட்டேன். எனது வீட்டிற்கு பஞ்சாயத்தில் பெற்ற அனுமதி மற்றும் வரி செலுத்திய ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் இல்லை என்றாலும் 3 ஆம் பிரதிவாதியான எனது மருமகளிடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மருமகள் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வருவாரா என்றால் வரமாட்டார். எனது மருகளும் நானும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். இரணியல் காவல் நிலையத்தில் வாதிகள் கொடுத்த புகாரின் விசாரணையில் எனக்கு என்ன அறிவுரை கூறினார்கள் என்றால் நினைவில்லை.

3. தாவா சொத்தை எனது அண்ணன் அவரின் பாகத்தை விட்டுக்கொடுத்திருப்பதாக நான் அளித்துள்ள சாட்சியம் உண்மையானது தான என்றால் எனது அம்மா சம்பாதித்து வாங்கிய சொத்தாகும். எனது முதல் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள பண பரிவர்தனைகளை எனது பதில் உரையில் நான் குறிப்பிடவில்லை

என்றால் நினைவில்லை. பதில் உரையில் தெரிவித்த விபரங்கள் தற்போது எனக்கு நினைவில்லை என்றால் சிறிதளவு நினைவில் உள்ளது. எனக்கு எனது பாக சொத்து கிடைத்தது போல் எனது சகோதரர்களுக்கும் அவர்களது பாக சொத்து கிடைக்க வேண்டும் என்றால் கொடுக்கமுடியாது. நான் கிரயம் கொடுத்து வாங்கிய சொத்தாகும். தாவா சொத்து எனது அம்மா கிரயம் பெற்ற சொத்து அல்ல என்றாலும் எனது அப்பா பெயரில் உள்ள சொத்து என்றாலும் சரியல்ல. எனது அப்பாவின் காலத்திற்கு பின்பு அவரது வாரிசுகளான வாதிக்கும் எனக்கும் மற்ற சகோதர, சகோதரிகளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

4. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்களுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. அவர்களுக்கு பாகம் கொடுக்க மறுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்கில் உண்மை தன்மை இல்லாததால் பதில் உரையில் ஒன்றும் முதல் விசாரணையில் ஒன்றுமாக மாற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**